02-05-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

## தலைப்பு : சமூக உடைமையாக அறிவு : பதிப்புரிமையின் சிக்கல்களும் Creative Commonsஉம்.

**தொடக்கவுரையாடல் : தி. கோபிநாத்**

*அறிவு என்பது தன்பாட்டில் ஒரு மனிதருக்குள்ளிருந்து ஊற்றெடுக்க முடியாது. அல்லது வானத்திலிருந்து அவரது மூளைக்குள் புகுந்துகொள்ள முடியாது. எமக்கு வெளியெ உள்ள உலகுடனான எமது ஊடாட்டத்தின் வழியாக நாம் பெற்றுக்கொள்ளும் பட்டறிவும், அப்பட்டறிவினை ஏற்கனவே சமூகத்தில் உள்ள அறிவைக்கொண்டு பகுப்பாய்வு செய்வதால் ஏற்படும் புதிய தகவல்களுமே அறிவாகக் கருதப்படுகிறது. இலக்கியம் உள்ளிட்ட கலைப்படைப்புக்களுக்கும் இது பொருந்தும்.*

*புறவுலகத்திலிருந்தும் ஏற்கனவே மக்கள் சமுதாயத்தில் வரலாறு நெடுகிலும் பலகோடிப்பேரால் உருவாக்கி அளிக்கப்பட்ட அறிவிலிருந்துமே அறிவு சார் படைப்புக்கள் புதிதாகத் தோன்ற முடியும் என்பதால் அறிவுக்குத் தனியொருவர் உரிமை கோருவது அபத்தமானதாகிறது. அடிப்படையில் அறிவுக்கும் கலைப்படைப்புக்களும் அவற்றை ஆக்கியோர் உள்ளிட்ட மக்கள் சமுதாயமே உரிமை கொண்டதாகும்.*

*ஆனாலும் அறிவுப் படைப்புக்களும் அறிவுச் சொத்துக்களும் கலைப்படைப்புக்களும் இலாபம் தரும் விற்பனைப் பண்டங்களாக இருப்பதால் அவற்றைத் தனியுரிமையாக்கவேண்டிய தேவை எழுகிறது. இந்த வணிக வாய்ப்புக்கள் காரணமாகவும் அல்லாமலும் படைப்புக்களில் தம் பெயரை எப்போதும் குறித்துக்கொள்ளும் விருப்பமும் காணப்படுகிறது.*

*தாம் வெளியிட்ட நூல்களை வேறொருவர் மறுபதிப்புச் செய்யவதைத் தடுக்கவும் தமது படைப்பாக்கங்களை வேறொருவர் பயன்படுத்துவதைத் தடுக்கவும் தமது படைப்பாக்கம் திருத்தி மாற்றப்படுவதைத் தடுக்கவும் படைப்பாக்கங்களுக்குப் பதிப்புரிமை கோரப்படுகிறது. பதிப்புரிமை கோரப்படாத ஆக்கங்கள் கூட இயல்பாகவே பதிப்புரிமையைப் பெற்றிருக்கின்றன. இவ்வாறுதான் தற்காலப் பதிப்புரிமைச்சட்டங்கள் அமைந்துள்ளன.*

*காலவோட்டத்தில் பதிப்புரிமை கோருவதற்கான காலம் மெல்ல மெல்ல அதிகரிக்கப்பட்டு, தற்போது நூலொன்றின் ஆசிரியர் இறந்து 75 ஆண்டுகள் வரை அந்நூல் அவருக்குப் பதிப்புரிமையுடையது என வரையறுக்குமளவுக்கு வந்துள்ளது. IMF உடன் இலங்கை அரசாங்கம் செய்துகொண்ட உடன்படிக்கையின் படி உலககளாவிய காப்புரிமை/பதிப்புரிமைச் சட்டங்கள் (என்று கூறப்படும் அமெரிக்கக் காப்புரிமைச் சட்டங்கள்) இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.*

உலகமயமாக்கலின் கீழ் நன்னீரை, விதையினங்களை விற்பனைப் பண்டமாக மாற்றுகிற நிகழ்ச்சிநிரலின் கீழ் அறிவுச் சொத்தும் விற்பனைப்பண்டமாக்கப்பட்டுவருவதையே இத்தகைய உடன்படிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன. நாடுகள் தமக்கெனத் தனியான காப்புரிமை/பதிப்புரிமைச் சட்டங்களைக் கொண்டிருப்பதனை இந்த நிகழ்ச்சி நிரல் வன்மையாக எதிர்க்கிறது.

*உலகமயமாக்கலின் கீழ் நன்னீரை, விதையினங்களை விற்பனைப் பண்டமாக மாற்றுகிற நிகழ்ச்சிநிரலின் கீழ் அறிவுச் சொத்தும் விற்பனைப்பண்டமாக்கப்பட்டுவருவதையே இத்தகைய உடன்படிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன. நாடுகள் தமக்கெனத் தனியான காப்புரிமை/பதிப்புரிமைச் சட்டங்களைக் கொண்டிருப்பதனை இந்த நிகழ்ச்சி நிரல் வன்மையாக எதிர்க்கிறது.*

*இத்தகைய சட்டங்கள் மனித அறிவு திறந்த நிலையில் பகிரப்படுவதையும், படைப்பாக்கங்கள் சுதந்திரமாகப் பயன்படுத்தப்படுவதையும் இல்லாமலாக்குகின்றன.*

**மிகுதி அடுத்த பக்கம்**

### அடுத்து வரும் தலைப்புக்கள்

**சிரியா: புனையப்படும் கதைகளும் தெரியவேண்டிய உண்மைகளும்**
09-05-2013



செம்படையால் நாசிக்கள் தோற்கடிக்கப்படல்

*மே - 9 1945 இல் சோவியத் யூனியனின் செம்படை நாசி ஜேமனிக்குள் புகுந்து நாசிக்களைத் தோற்கடித்து இரண்டாம் உலகப்போரின் முடிவுக்கான முக்கிய வெற்றியைப் பெற்ற நாள்.*

*சோவியத் யூனியனுக்குள் புகுந்த ஹிட்லரின் நாசிப்படைகள் கடுமையான சேதத்தினை சோவியத் யூனியனுக்கு ஏற்படுத்திய நிலையில் சோவியத் செம்படைகள் ஹிட்லரின் நாசிப்படைகள் மீது எதிர்த்தாக்குதல் தொடுத்து ஜேர்மனி வரை விரட்டிச்சென்று தோற்கடித்து வெற்றிக்கொடி நாட்டினர்.*

*இதன் மூலம் இரண்டாம் உலகப்போரை முடித்துவைத்த பெருமை செம்படைகளையே சாருமென கருதப்படுகிறது.*

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.
0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

செய்திமடல் - 100 | 09-05-2013

## சமூக உடைமையாக அறிவு

முன்பக்கத் தொடர்ச்சி..

அதையும் தாண்டி, அறிவையும் படைப்பாக்கங்களையும் மனித சமுதாயம் மேலும் வளர்த்துச்செல்வதையும் மெருகூட்டுவதையும் கூட ஒழித்துவிடுகிறது.

இத்தகைய தீவிளைவுகள் ஒருபுறமாக இருக்க, பதிப்புரிமை என்பது ஒருவகை "நாகரிகமாக" (Fashion) மாற்றப்பட்டுள்ளது. பதிப்புரிமை கோரத்தேவையில்லாத ஆக்கங்களுக்கெல்லாம், தம்மையறியாமலே நாகரிகம் கருதி பதிப்புரிமை கோருகிற வழக்கமும் ஏற்பட்டுள்ளது.

பகிர முடியாமை, வளர்த்தெடுக்க முடியாமை தவிர, பதிப்புரிமைச் சட்டத்திலுள்ள சிக்கல்கள் காரணமாக அரிய நூல்களை ஆவணப்படுத்துவது கூடச் சாத்தியமற்றுப்போகிறது. இதனால் குறுகிய வட்டத்துள் அடைக்கப்படும் அறிவானது இல்லாமலே போய்விடுகிற நிலையும் காணப்படுகிறது.

இத்தகைய தீவிளைவுகளைத் தவிர்ப்பதகு, பதிப்புரிமைச்சட்டங்களை இறுக்கி மேலும் மேலும் வணிகமயப்படுத்துவதற்கு ஏதுவான தனிச்சொத்துடைமை ஒழிக்கப்படவேண்டும். அல்லது அதுவரையான காலத்தில் இருக்கிற சட்ட ஏற்பாடுகளுக்குள்ளேயே ஏதாவது மாற்று ஒழுங்குகளைத்தேடவேண்டும். மாற்று ஏற்பாடுகளாகப் பல்வேறு 'அளிப்புரிமை' ஒப்பந்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவை தவிர வேறுபல உரிமங்களும் காணப்படுகின்றன. GNU GPL இனை அடிப்படையாகக்கொண்ட பதிப்புரிமை ஒப்பந்தங்கள், Creative Commons எனப்படும் "படைப்பாக்கப் பொதுமங்கள்" போன்றவை இவற்றுள் முக்கியமானவை.

இத்தகைய மாற்று ஒப்பந்தங்கள், படைப்பாக்கத்தினைச்செய்யும் படைப்பாளிக்குக்கு இருக்கக்கூடிய பதிப்புரிமை அதிகாரத்தினைப் பயன்படுத்தி, அப்படைப்பினை பகிரவும் பயன்படுத்தவும் அனுமதிக்கிற ஒப்பந்தங்களாக இருக்கின்றன.

### படைப்பாக்கப் பொதுமங்கள் (Creative Commons)

ஆக்கங்களை சட்டப்படி மற்றவரோடு பகிர்ந்துகொள்ளலை ஊக்குவிப்பதையும் விரிவுபடுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு இயங்கும் இலாபநோக்கற்ற அறக்கட்டளை ஆகும். இது 2001 இல் லோறன்ஸ் லெஸிக் என்பவரால் தொடங்கப்பட்டது. இது ஆக்கர்களுக்கும் பயனர்களுக்கு இடையேயான ஒரு பாலமாக அமைகிறது. படைப்பாக்கப் பொதுவெளி உரிமங்கள் அனைத்து உரிமைகளையும் கட்டுப்படுத்தாமல், அளிப்புரிமையை ஊக்குவிக்கின்றன. எந்த உரிமையை அளிப்பது என்பது அதாவது முழுவதையும் காப்புரிமைக்கு கட்டுப்படுத்தலில் இருந்து முழுமையாகப் பொதுவில் விடுதல் என்ற தெரிவு ஆக்கர்களிடமே விடப்படுகிறது. கட்டற்ற படைப்பு உரிமங்களுக்கும், முழுமையான காப்புரிமை உரிமங்களுக்கும் இடைப்பட்ட ஒரு மிதவாத தீர்வாகப் பார்க்கப்படுகிறது.

படைப்பாக்கப் பொதுமங்கள் அமைப்பானது பல்வேறு தேவைகளுக்கும் பயன்படக்கூடிய வகையில் வெவ்வேறு வகையான ஆறு உரிம ஒப்பந்தங்களை தயாரித்து வழங்கியிருக்கிறது. அவ்வாறு உரிமங்களும் படைப்பாக்கப் பொதுமங்களின் உரிமங்கள் என அழைக்கப்படுகிறன. அவ்வாறு உரிமங்களும் கீழ்க்காணும் மூல உரிமங்களின் வெவ்வேறு விதமான சேர்க்கையாக அமைகின்றன.

- Attribution – acknowledge and name the author/creator of the work
- Non-commercial – the work may not be used in a commercial product – i.e. sold for profit
- No Derivative Works – no remixing or editing of the original image/work is allowed
- ShareAlike – remix only if you let others remix whatever is created as a result

### படைப்பாக்கப் பொதுமங்களின் மூல உரிமங்கள் :

Attribution குறிப்பிடுதல்/Attribution (by) ஆக்கங்களை படியெடுக்க, விநியோகிக்க, காட்சிப்படுத்த, இயக்க, வழிபொருட்களை உருவாக்க ஆகிய உரிமைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் தகுந்த முறையில் அல்லது வேண்டப்பட்ட முறையில் படைப்பாளிகள் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

Non-commercial இலாபநோக்கமற்ற/NonCommercial (nc)

ஆக்கங்களை படியெடுக்க, விநியோகிக்க, காட்சிப்படுத்த, இயக்க, வழிபொருட்களை உருவாக்க ஆகிய உரிமைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் இலாப நோக்கமற்ற நோக்கங்களுக்கு மட்டுமே.

Non-derivative வழிப்பொருளற்ற/NoDerivs (nd)

ஆக்கங்களை படியெடுக்க, விநியோகிக்க, காட்சிப்படுத்த, இயக்க ஆகிய உரிமைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் வழிபொருட்களை உருவாக்குவதற்கான உரிமை தரப்படவில்லை.

Share-alike அதே மாதிரிப் பகிர்தல்/ShareAlike (sa) வழிபொருட்களை முதன்மை ஆக்கத்துக்குரிய அதே உரிமங்களோடே விநியோகிக்க முடியும்.



**சிரியா: புனையப்படும் கதைகளும் தெரியவேண்டிய உண்மைகளும்**
**(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)**

§ சிரியா பற்றிய அறிமுகம்: வரலாறும் புவியியல் அமைப்பும்

§ புதிய உலக ஒழுங்கில் மத்தியகிழக்கும் சிரியாவின் முக்கியத்துவமும்

§ சிரியா குறிவைக்கப்படுவதற்காக காரணங்கள் எவை

§ சிரிய உள்நாட்டுப் போரின் அடிப்படையும் அரங்காடிகளும்

§ சிரியாவின் இன்றைய நிலைமையும் இரசாயன ஆயுதப்பாவனையும்

§ இஸ்லாமிய அடிப்படைவாதம் சவுதி அரேபியா மற்றும் விடுதலைப்போராட்டங்கள் பற்றிய புரிதலுக்கான தேவை

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA